# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கல்லூரிக்கு 2 Multi-Media Overhead Projectors அன்பளிப்பு!

அண்மையில் (07-10-2017) நடைபெற்ற அமரத்துவமாது திருமதி சாயாதேவி (ஆச்சி) செல்வராசா அவர்களது 31ம் நாள் நிகழ்வில் அவரது நினைவாக வேலணை மத்திய கல்லூரிக்கு இரண்டு பல்லூடக மேல்நிலை எறிகருவிகள் வழங்குவதற்கான முழுச் செலவையும் பொறுப்பேற்று ஆரம்ப நிதியாக 1000 டொலர்களை வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் சிரேஸ்ட உபதலைவர் திரு பொன் பஞ்சலிங்கம் நிர்வாகசபை உறுப்பினர் திரு க. பாஸ்கரன் ஆகியோரிடம் அன்னாரது அன்புக் கணவர் திருசெல்வராசா அவர்கள் வழங்கினார்.

இவர்களது அறஞ்சார்ந்த முன்னுதாரணமான அரிய செயலைச் சங்கத்தின் சார்பிலும் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றோம். தற்போது முதலாவது எறிகருவியைப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பொருத்தும் வேலைகள் நடை பெறுகின்றன. இந்த முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பழைய மாணவரும் இலத்திரனியல் பொறியியலாளருமான மண்ணின் மைந்தன் திரு சிந்துசன் தர்மராஜேந்திரன் அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் கல்லூரியின் இந்த ஆண்டிற்கான பரிச ளிப்பு விழா 1-11-2017இல் வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளதனையும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் பெருமையுடன் அறியத் தருகின்றேன்.



### பெண்குலத்தின் பொன் விளக்கொன்று அணைந்து விட்டது!

வேலணை மண்ணின் வரலாற்று ஆவணத்தில் தவிர்க்க முடியாத அத்தியாயங்களில் காலஞ்சென்ற விசக்கடி வைத்தியர் தெய்வத்திரு கதிரவேலு குடும்பத்தின் வரலாறும் ஒன்றாகும் என்றால் அது மிகையல்ல. திரு கதிரவேலு அவர்களின் மகள் திருமதி அனுசம்மா இளையதம்பி அவர்களது அன்பு மகளே அமரர் திருமதி சாயாதேவி செல்வராசா அவர்களாவர். இவரது தந்தையார் சிங்கப்பூரில் வேலை பார்த்தவர். தாயார் அவரது தந்தை வழியில் விசக்கடி வைத்தியத்தில் கை தேர்ந்தவராக விளங்கினார்.

இவரது தாய்மாமன்மார் காலஞ் சென்ற தெய்வத்திரு தியாகராசா தெய்வத்திரு சிற்றம்பலம் மற்றும் திரு சிவபாதம் ஆகியோரும் இவரது சகோதரர் திரு அப்பு அவர்களும் நாடு போற்றும் சித்த வைத்தியர்கள் மட்டுமல்ல சிகிச்சைக்குப் பணம் வாங்காத மக்கள் நலன் பேணும் சமூகசேவையாளர்கள். திரு அப்பு அவர்கள் இன்றுவரை இப்புனித கைங்கரியத்தைத் தொடர்வதுடன் யாழ் மாவட்டச் சித்த வைத்தியர்கள் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார் என்பது பாராட்டுக்குரிய விடயமாகும். திருமதி சாயாதேவி செல்வராசா அவர்களும் எமது சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்து சேவையாற்றியமை இங்கு நினைவுகூரத்தக்கது.

அன்னாரது நெருங்கிய உறவினர்களான செங்கண்மாரி வைத்தியர் தெய்வத்திரு சிதம்பரப்பிள்ளை இராஜரட்ணம் அவர்களும் வேலணை ஆத்திசூடி வித்தியாசாலையின் ஸ்தாபகர் தெய்வத்திரு (இந்துபோட்) சதாசிவம் அவர்களும் இவரது வழிகாட்டிகளாவர். திருமதி சாயாதேவி செல்வராசா அவர்கள் வேலணை மத்திய கல்லூரியின் நாட்டியத் திறமை பெற்ற பழைய மாணவர்களில் ஒருவராவார் 1954 இல் நடைபெற்ற எமது பாடசாலையின் மாடிக் கட்டிடத் திறப்பு விழாவில் வரவேற்பு நடனத்தில் பங்குபற்றும் அரிய வாய்ப்பைப் பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது கணவர் திரு செல்வராசா அவர்கள் அன்பும் பண்பும் மிக்கவர் மட்டுமல்லாது தனது மனைவி மற்றும் பிள்ளைகளின் மனங்கோணாது வாழ்ந்துவரும் பகைச்சுவையறியாப் பண்பாளர். இவரது அன்புப் பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் அவ்வாறே.

அன்னாரது வாழ்வைப் பின்வரும் பொய்யாமொழியைக் கொண்டு விளக்குவது சாலச்சிறந்ததாகும்.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித்
தகைசான்ற சொல்காத்துச் சோர்விலாள்
பெண்

தனது கணவன் மற்றும் குடும்பத்தின் பெருமையைக் காக்க ஓயாது உழைப்பவளே சிறந்த குடும்பத்தலைவி என்பது இதன் பொருள்.

மருத்துவம் அறிந்து மகத்துவம் பெற்ற குடும்பத்திலே பிறந்து நல்ல பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களையும் நண்பர்களையும் பெற்றுச் சிறப்புற வாழ்ந்த திருமதி சாயாதேவி செல்வராசா அவர்களின் மூப்பு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடாவின் சார்பில் அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

***சி. இளஞ்செழியன் (தலைவர்)***

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா